நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 349/2023

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | அறிவழகன் |
| தந்தை / கணவர் பெயர் | : | சீத்தாராமன் |
| கிராமம் | : | வெட்டுக்கரடு |
| வட்டம் | : | சேந்தமங்கலம் |
| மாவட்டம் | : | நாமக்கல் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 59 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம்,மே மாதம், 27–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.35 PM

1. இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி நான்தான் என்றால் சரிதான். இந்த வழக்கின் புலன் விசாரணை முழுவதும் முடிப்பதற்கு முன்பாகவே பணிமாறுதல் ஆகி சென்றுவிட்டதாக முதல் விசாரணையில் நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு பின்னிட்டு வனச்சரகர் ராஜேந்திரன் என்பவர்தான் இந்த

வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டார்.

2. அவர் இந்த வழக்கில் என்ன மேல்விசாரணை மேற்கொண்டார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். தனிப்புகாரை நீதிமன்றத்தில் வனச்சரகர் சிவானந்தம் என்பவர்தான் தாக்கல் செய்தார். இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம், மாதிரி வரைபடம், படிவம் H ஆகிய ஆவணங்களை நான் எனது கைப்பட தயார் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் என் முன்னிலையில் தயார் செய்யப்பட்டது.

3. மேற்படி ஆவணங்கள் என் முன்னிலையில் தயார் செய்யப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களை தயார் செய்ய வனக்காப்பாளருக்கு அதிகாரம் இல்லை என்றாலும் நான்தான் தனிப்பட்ட முறையில் பதிவுசெய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

4. தனியறிக்கை தாக்கல் செய்த பத்ரன், தான் இந்த வழக்கு சம்மந்தப்பட்ட வனப்பகுதிக்கு வனக்காப்பாளர் அல்ல என்று சொல்லியிருந்தால் அது தவறு. இந்த சம்பவத்திற்கு முன்பாக அந்த பகுதியில் ஒற்றையானை சுற்றி திரிந்ததாக எங்களுக்கு புகார் எதுவும் வரவில்லை. சென்னம்பட்டி வனச்சரகத்திற்கு அவ்வாறு தகவல் வந்ததாக விசாரித்து தெரிந்துக்கொண்டேன்.

5. சென்னம்பட்டி வனச்சரகத்தில் இருந்து வனச்சரக எல்லை சேலம் மாவட்ட எல்லைக்குட்பட்ட பட்டா நிலத்தில் முடிகிறது என்றால் சரிதான். மேற்படி எங்களது எல்லைக்குட்பட்ட பகுதியில் யானை வருவதை தடுக்க தினமும் ரோந்து பணி மேற்கொண்டோம். அதுசம்மந்தப்பட்ட பீட் நோட்டை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

6. அந்த பகுதியில் யானை வருவதை தடுக்க அகழிகள் எதுவும் வெட்டி வைக்கப்படவில்லை. எனக்கு இந்த வழக்கு சம்மந்தமாக வனவர் ரகுநாதன் மூலமாக தகவல் தெரியவந்தது. தகவல் கிடைக்கும்போது சுமார் காலை 05.30 மணியிருக்கும். நான் சம்பவயிடத்திற்கு காலை 06.30 மணி சுமாருக்கு சென்றேன். தனியறிக்கை சம்பவயிடத்தில்தான் என்னிடம் கொடுக்கப்பட்டது.

7. நான் பார்க்கும்போது இலவச மின்சார இணைப்பு கொடுக்கப்பட்ட இடத்திலிருந்து மின்சாரம் எடுக்கப்பட்டது. அது எவ்வாறு இருந்தது என்றால் செங்கற்களால் கட்டப்பட்டிருந்த ஒரு மோட்டார் ரூம் ஆகும். அதில் பொருத்தப்பட்ட இருந்த பியூஸ் கேரியலில் இருந்துதான் மின்சார இணைப்பு எடுக்கப்பட்டிருந்தது. மூன்று பியூஸ் கேரியல்கள் அந்த இடத்தில் இருந்தது. அதில் இரண்டு கேரியல்களில் இருந்து மின்சாரம் எடுக்கப்பட்டிருந்தது.

8. நான் பார்க்கும்போது துண்டிக்கப்பட்ட ஒயர் அந்த பியூஸ் கேரியல் இருந்திருந்தால் ஆமாம். ஆனால் அது ஒயர் அல்ல கட்டுக்கம்பி. கட்டுக்கம்பியை நேரடியாக பியூஸ் கேரியலில் சொருகியிருந்தார்கள். நான் பார்க்கும்போது பியூஸ் கேரியலிருந்து அரை அடி நீளத்திற்கு துண்டிக்கப்பட்டிருந்தது. இரண்டு பியூஸ் கேரியல்களில் ஒன்றில் மட்டும்தான் துண்டிக்கப்பட்டிருந்தது. மற்றொன்றில் முழுமையாக இணைப்பில்தான் இருந்தது.

9. அந்த வெட்டப்பட்ட கம்பியை நாங்கள் கைப்பற்றவில்லை. நாங்கள் பார்க்கும் மின்சாரம் தடை செய்யப்பட்டிருந்தது. அது எவ்வாறு தடைசெய்யப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. இதற்கு முன்னால் சாட்சி சொன்ன வனத்துறையினர் மேற்படி மின்இணைப்பு கொடுக்கப்பட்ட இடத்தில் இருந்து ஒயர் மூலமாக 10 மீட்டர் நீளத்திற்கு இணைப்பு கொடுக்கப்பட்டு அதிலிருந்து கட்டுக்கம்பி கொடுத்து இணைப்பு கொடுக்கப்பட்டிருந்ததாக கூறியிருந்தால் அது தவறு. கட்டுக்கம்பியை மட்டும்தான் கைப்பற்றினோம்.

10. ஆஜர் எதிரியின் காட்டில் பருத்தி பயிரிடப்பட்டிருந்தது. செடிகள் இருந்தது. இலைகள் பச்சையாக குறைவாகத்தான் இருந்தது. வேலி அமைக்கப்பட்ட இடத்தில் இருந்து யானை எவ்வளவு தூரத்தில் கீழே கிடந்தது என்று எனக்கு சரியாக தெரியவில்லை. மருத்துவர்கள் பிரேத பரிசோதனை செய்ய 12.00 மணிக்குதான் வந்தார்கள். மருத்துவர் வருவதற்கு முன்பாகவே நாங்கள் யானை தந்தத்தை வெட்டி எடுத்து அளந்ததாக படிவம் H ல் குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு.

11. நாங்கள் சம்பவயிடத்திற்கு சென்று பார்க்கும்போது மின்கம்பி குச்சியில் கட்டி

யானையின் கால்களில் மாட்டியிருந்தது. நாங்கள் வைத்திருந்த தராசில் மின்கம்பியை வனக்காப்பாளர்கள் எடைபோட்டார்கள். யானையின் தந்தத்தையும், குச்சிகளையும் பத்ரனும், குழந்தைவேலும் என் முன்னிலையில் அளந்தார்கள். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலமாக ஏதேனும் பொருட்கள் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை.

12. நாங்கள் எடுத்த புகைப்படம் மற்றும் சி.டி.க்கு இந்திய சாட்சிய சட்டப்படி எதுவும் எனக்கு தெரிந்து தாக்கல் செய்யவில்லை. எனக்கு பின்னால் வந்தவர்கள் என்ன செய்தார்கள் என்றால் தெரியாது. புகைப்படம் மற்றும் சி.டி. யை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மின்வாரிய அலுவலரை விசாரித்து வாக்குமூலம் எதுவும் நான் வாங்கவில்லை.

13. ஆஜர் எதிரியை நாங்கள் அனைவரும் சேர்ந்துதான் கைது செய்தோம். பொதுவாக யானை மின்னல் தாக்கி இறக்க வாய்ப்பில்லை. வேறுபகுதியில் மின்சாரம் தாக்கி சம்பவயிடத்திற்கு வந்து இறந்திருக்கலாம் என்றால் சரியல்ல. அதற்கு வாய்ப்பில்லை.

14. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் எனக்கு கீழ் பணிபுரியும் அதிகாரிகள் தயார் செய்து வைத்திருந்த ஆவணங்களில் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு செல்லாமலே அலுவலகத்தில் வைத்து ஆவணங்களில் கையொப்பம் செய்துவிட்டு வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 12.10 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**